**கவனிக்க.-** *2010.07.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1662 - 2010 ජූලි මස 09 වැනි සිකුරාදා - 2010.07.09**

*1662 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 968 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 971 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 15, காக்கைதீவு, இல. 65/274 இல் வசிக்கும் மொஹமட் மொஹிதீன் மொஹமட் சஜாட் (தே. அ. அ. இல. : 650860853X, 1982.03.25 ஆந் திகதி) என்பவருக்கு எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்து பதிவாளர் அதிபதி அலுவலகத்தில் பதிவுசெய்துள்ள நொத்தாரிசு இல. 8020 எனும் 1993.11.04 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழிப்ப தாகவும் மேற்படி விசேட அற்றோணித் தத்துவம் அதிகாரமற்ற மற்றும் சட்டத்தின் முன்னிலையில் செயற்படுத்த முடியாத ஆவணமாக கொழும்பு, காக்கைதீவு, இல. 60/274பி இல் வசிக்கும் மொஹமட் மொஹிடீன் மொஹமட் பஸால் (தே. அ. அ. இல. : 622240149 X) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

எம். எம். எம். பஸால்.

2010.06.17.

7-322

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறியத் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : பென்லி கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : இல. 190, நாம்புலுவ வீதி, பஸ்யால
*பதிவு இலக்கம்* : பீவீ 71681

எச்டிபீ பிஸ்னஸ் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 2/5, ஸ்டேஷன் வீதி,
கொழும்பு 03

7-338

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறியத் தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : டோரஸ் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு முகவரி* : இல. 73-2/1, டெம்ப்லர்ஸ் வீதி, கல்கிசை
*பதிவு இலக்கம்* : பீவீ 71794

எச்டிபீ பிஸ்னஸ் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 2/5, ஸ்டேஷன் வீதி,
கொழும்பு 03

7-337

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று கூட்டிணைக்கப்பட்டமை பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டமை பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : நெட்டிசோ (பிவீரி) எல்ரிடீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 72694
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010.06.14
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 24 1/1, பிளவர் வீதி, கொழும்பு 3

நெட்டிசோ (பிவீரி) எல்ரிடீ இற்காகவும்
அதன் சார்பிலும் பி. டபிள்யூ. கோர்பரேட்
செக்ரடேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-287

---

## ஷெல் டேர்மினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

(கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 8103)

### குறிக்கப்பட்ட முதலீட்டின் உத்தேசித்த குறைப்பு குறித்த அறிவித்தல்

இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருவதாவது, ஷெல் டேர்மினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டின் செயற்குழு நிர்வாகிகள் தமது பங்குதாரர்களுக்கு அறியத்தருவதாவது நிறுவனத்தின் குறிக்கப்பட்ட மூலதனமான முந்நூற்றுநாற்பத்தொரு கோடியே பதினொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து நானூற்றைம்பது ரூபா (ரூ. 341,11,09,450) பிரிந்து முப்பத்துநான்கு கோடியே பதினொரு இலட்சத்து பத்தாயிரத்து தொளாயிரத்துநாற்பத்தைந்து ரூபா (ரூ. 34,11,10,945) முற்றாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் பின்வரும் நூற்றைம்பத்தெட்டு கோடியே எழுபத்தொரு இலட்சத்து ஒன்பதாயிரத்து நானூற்றைம்பது இலங்கை ரூபா (ரூ. 158,71,09,450) பிரிந்து பதினைந்து கோடியே எண்பத்தேழு இலட்சத்து பத்தாயிரத்து தொளாயிரத்துநாற்பத்தைந்து ரூபா (ரூ. 15,87,10,945) முற்றாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளாக, பதிவுசெய்யப்பட்டுள்ள பங்குதாரர்களுக்கு பகுதிவாரியாக மீளச்செலுத்

துவதன் மூலம் நிறுவனத்தில் அவர்களின் மூலதன முதலீட்டு பெறுமதியான நூற்றெண்பத்திரண்டு கோடியே நாற்பது இலட்சம் ரூபா (ரூ. 182,40,00,000) பிரதிபலிக்கும் பதினெட்டு கோடியே இருபத்து நான்கு இலட்சம் ரூபா (ரூ. 18,24,00,000) முற்றாக செலுத்தப்பட்ட நிறுவனத்தின் சாதாரண பங்குகள், பங்கொன்றுக்கு 10 ரூபா என்ற பெறுமதி அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இப்பெறுமதி நிறுவனத்தின் தேவைக்கு மேலதிகமாக உள்ளதுடன், மேற்படி மூலதனக் குறைப்பு கம்பனிச் சட்டம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத்திற்கு அமைவானதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஓகத்து 30 ஆந் திகதி நிறுவனத்தின் பொதுக்குழு கூட்டமொன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்கூட்டத்தில் குறிக்கப்பட்ட முதலீட்டின் உத்தேசித்த குறைப்பு பங்குதாரர்களின் அங்கீகாரத்தை பெறும் வகையில் தீர்மானங்கள் எட்டப்படவுள்ளது.

குழுத் தீர்மானம்,

ஜேசி அன்ட் கம்பனி,
செயலாளர்கள்.

7-285

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தாலி நாட்டில், மிலோனோ 20129, இல. 36, பிசோகேன் கார்லோவில் தற்போது வசிக்கும் விக்ரமகே தோன் தில்ஹான் பிரதீப் குமார் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது, இத்தாலியில் மிலோனோவில் அலே மர்யா றொசயிரோ கன்சானோலால் உறுதிப்படுத்தப்பட்ட 2002.03.31 ஆந் திகதியுள்ள பன்னிப்பிட்டிய, தெபானமை, உயன இல. 173/31 இல் வசிக்கும் விக்ரமகே தோன் சந்திரதாஸவிற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கிறேன். 2010.06.26 ஆந் திகதி முதல் இவரால் செய்துகொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதை அறியத்தருகிறேன்.

விக்ரமகே தோன் தில்ஹான் பிரதீப் குமார்.

7-341

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

காலி, லெந்தேவ, வடரெக வீதியில் இல. 38 என்ற இடத்தில் வசிக்கும் பன்கொட விதானகே விமல் ரவின்திர ஆகிய நான், 2010, சனவரி மாதம் 19 ஆந் திகதி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய அகமட் மன்ஸூர் ஸித்திலெப்பே மரிக்கார் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11098 என்ற அற்றோணித் தத்துவத்தின் மூலம் அக்குரஸ்ஸ, அமலகொட, காலி வீதியில் இலக்கம் 22 என்ற இடத்தில் வசிக்கும் பன்கொட விதானகே சான்த றொஹான் ஜயவிக்கிரம என்பவருக்கு அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் எனவும் பொது மக்களுக்கு தெரிவிக்கின்றேன்.

மேற்படி குறிப்பிட்ட இரத்துச்செய்தல் 2010, யூன் மாதம் 21 ஆந் திகதியில் இருந்து அமுல்படுத்த வேண்டும் என்றும் அன்று தொடக்கம் அவருடைய எந்த செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

பன்கொட விதானகே விமல் ரவின்திர.

2010, யூன் 21.

7-284

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : மூண் டிரெடிங் கம்பனி (பிவிடி) எல்டிதி
கம்பனியின் இலக்கம் : பீவீ 72726
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.06.15
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 96-2/2, புரொன்ட் வீதி, கொழும்பு 11

அமல்கமேற்றற் மெனேஜ்மென்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2010.06.20.

7-240

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : ஜூஸ் டிரெடிங் லங்கா (பிவிடி) எல்டிதி
கம்பனியின் இலக்கம் : பீவீ 72660
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.06.11
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 101, 4 ஆம் மாடி, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13

அமல்கமேற்றற் மெனேஜ்மென்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 96-2/2, புரொன்ட் வீதி,
கொழும்பு 11.
2010.06.15.

7-241

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : பிஸ் வேர்ல்ட்வைட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 70604
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.01.06
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 248/21, கடுவலை வீதி, மாலபே

பிஸ் வேர்ல்ட்வைட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி இயக்குனர்.

2010.06.10.

7-242

---

**அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அநுராதபுரம், மஹபுலத்குலம, இல. 366 என்ற இடத்தில் வசிக்கும் குமாரபெலி ஆராச்சிலாகெ டோன் நாலக சுசந்த குமாரபெலி ஆகிய நான், எப்பாவில, இஹலசியபலேவே, இல. 52 இல் வசிக்கும் எகனாயக முதியான்சேலாகே அநுராத கீர்த்தி பண்டார எலகொட என்பவருக்கு வழங்கியிருக்கும் இல. 641 மற்றும் 2009.01.13 ஆந் திகதி அநுராதபுர நீதிமன்ற பிரதேசத்தில் இல. 195 இல் பிரசித்த நொத்தாரிசு கே. சாதனா நிமதி என்பவரினால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவத்தை இன்று முதல் செல்லுபடியற்றதாகிவிட்டது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

7-218

---

**பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளுக்கமைய விடுக்கப்படும் அறிவித்தல்

கம்பனியின் பெயர் : கிளேரிட்ஜ் ஸ்டொக்ப்ரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72432
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 10, ஞான ரத்ன பிரதீப்பா மாவத்தை, கொழும்பு 8

சபையின் கட்டளைப் பிரகாரம்,

செயலாளர்கள்.

7-199

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 விதிகளுக்கமைய கூட்டிணைப்பு அறிவித்தல்**

கம்பனியின் பெயர் : ஃபார் ஈஸ்டெர்ன் என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72571
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 17/ஜே/11, கிரீன் டெரஸ், கஹன்தொட்ட வீதி, பிட்டுகல, மாலபே
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010, யூன் 7

கம்பனிச் செயலாளர்.

7-189

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்**

குவிக் காகோ லொஜிஸ்டிக் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 72719

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி, மேற்படி கம்பனியானது 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு இல. 153, தர்மபால மாவத்தை, கொழும்பு 7 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பிஸ்னஸ் அன்ட் இன்டஸ்டிரியல் கென்சல்டன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02.

7-253

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்**

எப்கேசீ ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 72603

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்படி, மேற்படி கம்பனியானது 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி கூட்டிணைப்புச் செய்யப்பட்டு இல. 16/20, கோல்பேஸ் கோட்ஸ் 2, கொழும்பு 3 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

பி. டி. ஓ. செக்கட்டரிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 65/2, சேர். சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்தை,
கொழும்பு 02.
2010.06.21.

7-254

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1033 5347 3541-கே. என். தர்மசிரி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.01.28 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.01.22 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, பதினேழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுநூற்று நாற்பது ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 17,26,640.90) 2009, செத்தெம்பர் 24 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பதினைந்து இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து இருநூற்றுமுப்பத்தேழு ரூபா எழுபது சதம் (ரூ. 15,72,237.70) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்துமூன்று வீதம் (23%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010.07.26 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்டி கோரளேயின் வடக்கு உடபத்து, தெம்பிலியான கிராமத்தில் அமைந்த "ரண்ஹவடியகே சவ்வஹிட்டியவத்த எனும் பிலின்காஹாவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ராமகிரிஷ்ணன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, மாச்சு 26 ஆந் திகதியிடப்பட்ட இலட. 7342 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 05 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : குணதிலக்க உரிமம் கோறும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. எல். ஹெட்டிஆரச்சி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1966, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2431 எனும் வரைபடத்தில் லொட்கள் 6 மற்றும் 7 ; கிழக்கிற்கு : கூறப்பட்ட இல. 2431 எனும் வரைபடத்தில் லொட் 07; தெற்கிற்கு : அடையும் வழி, மற்றும் ; மேற்கிற்கு : அடையும் வழி மற்றும் கூறப்பட்ட இல. 2431 எனும் வரைபடத்தில் லொட் 6 மற்றும் இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பதினெட்டு தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ.0றூ.18.3பே.) கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 7342 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 05 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட தெம்பிலியான கிராமத்தில் அமைந்த "ரண்ஹவடியகே சவ்வஹிட்டியவத்த எனும் பிலின்காஹாவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. எல். ஹெட்டிஆரச்சி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1966, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2431 எனும் வரைபட்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 05 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 6 ; கிழக்கிற்கு : லொட் 07 ; தெற்கிற்கு : லொட் 04 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 4 மற்றும் இவ் எல்லைகளுக்குள் அமைந்த பதினெட்டு தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18.3பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2431 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 758/263 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடன் கூடியது. கூறப்பட்ட இல. 2431 எனும் வரைபடத்தில் லொட் 04.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-288

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 0057 5000 3577-பீ. ஏ. வை. அபயசிங்ஹ, டீ. சீ. அபயசிங்ஹ மற்றும் ஏ. ஜீ. எல். நிஷாந்த

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.07.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.01.01 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.12.23 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நாற்பத்தெட்டு இலட்சத்து பதினாறாயிரத்து தொளாயிரத்திருபத்தேழு ரூபா ஐந்து சதம் (ரூ. 48,16,927.05) 2009, யூன் 13 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச்

செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பதினேழு இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து நாற்பத்துமூன்று ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 17,73,043.61) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) மேலும் ஒரு கட்டணமான இருபத்தைந்து இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து நானூற்றுமுப்பத்திரண்டு ரூபா (ரூ. 25,78,432) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதம் (21%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம மூலமாக 2010.08.18 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரைகம் கோரளையின், குடிக்கேபத்துவின், ஹொரணை பிரதேச சபை எல்லைகளுக்குள், முனகமவில் அமைந்த "திக்ஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. எச். அத்துலத்முதலி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, யூலை 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 1376 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு (தற்போது ஒரே காணியாகவுள்ள சொரன எஸ்டேட் இன் திக்ஹேன பிரிவின் லொட்கள் 1-8) லொட் 61 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட் 59 (வீதிக்கான ஒதுக்கம்) ; கிழக்கிற்கு : லொட் 255 (பிரதான வீதி மற்றும் ஒதுக்கம்) ; தெற்கிற்கு : லொட் 62 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 59 (வீதிக்கான ஒதுக்கம்) எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தொரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 31.0பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள் கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், அதனுடன் தொடர்புடைய கிளைகளுடன் கூறப்பட்ட இல. 1376 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹொரணை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C 272/136 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-289

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 0004 5004 1173-ஏ. ஜீ. டபிள்யூ. பண்டார

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009.07.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.25 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.14 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நாற்பத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து அறுநூற்று முப்பத்துமூன்று ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 42,56,633.57) 2009, ஏப்பிறல் 17 ஆந் திகதி முதல் இல. 1516 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை முப்பத்தேழு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐநூற்றுநாற்பத்தைந்து ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 37,77,545.25) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஏழு ஐந்து வீதம் (12.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட இல. 1516 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010.07.31 ஆந் திகதி பி. ப. 1.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளையின் அதிகாரி பத்துவின் களனி பிரதேச சபை எல்லைகளுக்குள் வராகொட வீரசிங்ஹ மாவத்தை, ஊடாக அமைந்த வரிமதிப்பீட்டிலக்கம் 65/1 (ஒரு பகுதி) ஐ ஏற்ற 'தெல்கஹாவத்தை' எனும் கொடக்கதுருகஹாவத்தை எனும் கதுருகாஹாவத்தை, உக்கஹாவத்தை, எகொட விட்ட இரியகஹாகும்புர, வெரலுகஹாவத்தை எனும் வெரலு கஹாஓவிட்ட, ஹிக்கஹாவத்தை மற்றும் "மூனமல்கஹாஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. டீ. எஸ். டி. சில்வா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998, சனவரி 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 3978 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : எல். பீ. பீ. வீரசிங்ஹவின் காணி ; கிழக்கிற்கு : லொட் 2 ; தெற்கிற்கு : வரைபட இல. 599 இல் லொட் எவ் $2^6$ (10 அடி அகல வீதி) மற்றும் ; மேற்கிற்கு : வீரசிங்ஹ மாவத்தை இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்து ஒன்று தசம் இரண்டு நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21.24பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள் வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட வரைபட இல. 3978 இற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C651/208 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி ஊடாகவும் அதன் மீதான வழி உரிமையுடன்.

மேற்கூறப்பட்ட வராகொடயில் அமைந்த 'தெல்கஹாவத்தை' எனும் கொடக்கதுருகஹாவத்தை எனும் கதுருகஹாவத்தை, உக்கஹாவத்தை, எகொடவிட்ட ஈரியகஹாகும்புர, வெரலுகஹாவத்தை எனும் வெரலு கஹாஓவிட்ட, ஹிக்கஹாவத்தை மற்றும் "மூனமல்கஹாஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். எம். டொனல்ட் என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990, நவெம்பர் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 599 இல் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் எவ் $2^6$ (10 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: லொட் எப் $2^1$ ; கிழக்கிற்கு : லொட்கள் எவ் $2^5$ மற்றும் எவ்

$2^3$ ; தெற்கிற்கு : லொட்கள் எவ் $2^3$, எவ் $2^4$, $2^5$ மற்றும் வரிமதிப்பீட்டிலக்கம் 67ஐ ஏற்ற தற்போது என். தர்மரத்ன உரிமம் கோரும் வளவு ; மேற்கிற்கு : லொட்கள் எவ் $2^4$ மற்றும் $2^5$ மற்றும் வீரசிங்ஹ மாவத்தை இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணி. கூறப்பட்ட இல. 599 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C656/86 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-290/1

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0004 5004 1173-ஏ. ஜீ. டபிள்யூ. பண்டார

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009.07.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.25 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.14 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இருபத்தொரு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 21,95,962.75) 2009, ஏப்பிறல் 17 ஆந் திகதி முதல் இல. 3679 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பத்தொன்பது இலட்சத்து இருபத் தாறாயிரத்து எழுநூற்றுத்தொண்ணூற்றிரண்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 19,26,792.86) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட இல. 3679 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010.07.31 ஆந் திகதி பி. ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குருகோரளையின் தாசியபத்துவின் மினுவங்கொடை, நகர சபை எல்லைகளுக்குள் மினுவாங்கொடையில் அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன், அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் 'தெவட்டகஹாவத்தை மற்றும் தெல்கஹாவத்தை' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, மாச்சு 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 43/2006 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : நிமினி சமரசிங்ஹ உரிமம் கோரும் லொட் 2 ; கிழக்கிற்கு : எல காணி ; தெற்கிற்கு : எல மற்றும் இல. 295/2005 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும்; மேற்கிற்கு : வரைபட இல. 295/2005 இல் லொட் 1 மற்றும் லொட் 2 இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்து எட்டு தசம் இரண்டு சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 28.20பே.) இல் 43/2006 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீகொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் C937/34 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி ஊடாகவும் அதன் மீதுமான மார்க்க உரிமையுடனானது -

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. கொட்டம்பகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 2005/295 எனும் வரைபடத்தின் லொட் 1.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-290/2

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0031 5000 8408-டபிள்யூ. பீ. ஐ. விக்கிரமசிங்ஹ மற்றும் மாலினி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2005.06.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2007.03.02 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2007.02.20 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து இலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து அறுநூற்றெழுபத்து மூன்று ரூபா இருபத்துநான்கு சதம் (ரூ. 5,53,673.24) 2005, மாச்சு 15 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை நான்கு இலட்சத்து தொண்ணூற்றோ ராயிரத்து நாற்பத்திரண்டு ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 4,91,042.82) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு வீதம் (18%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய

செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010.07.28 ஆந் திகதி பி. ப. 1.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை-தல்பிட்டி தெபெத்தவின் பாணந்துறை பிரதேச சபையின் கெசெல்வத்தை உப அலுவலக எல்லைகளுக்குள், பள்ளிமுள்ள மற்றும் வட்டபொலவில் அமைந்த ஹென்றிக் பீரிஸ் மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 5/10 ஐ ஏற்ற உளுகேவத்த பாவுல ஓவிட்ட எனும் பள்ளிமுள்ளவெல ஓவிட்ட ருக்கத்தனகாஹாகும்புர மற்றும் மாதன்காஹாவத்த பாவுல ஓவிட்ட என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. பீ. கே. கொஸ்த்தா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, யூலை 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 2767 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1டி2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : கூறப்பட்ட இல. 2767 எனும் வரைபடத்தின் லொட் 1டி1 ; கிழக்கிற்கு : இல. 1656 எனும் வரைபடத்தின் லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கம் ; தெற்கிற்கு : மேற்கூறப்பட்ட இல. 2767 எனும் வரைபடத்தின் லொட் 1சீ ; மற்றும் மேற்கிற்கு : எஸ். பீ. குருப்பு மற்றும் ஏனையோருக்குச் சொந்தமான காணி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் பாணந்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எப்321/65 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவுமான மார்க்க உரிமைகளுடனானது.

மேற்கூறப்பட்ட பள்ளிமுள்ள மற்றும் வட்டபொலவில் அமைந்த "உளுகேவத்த பாவுல ஓவிட்ட எனும் பள்ளிமுள்ளவெல ஓவிட்ட ருக்கத்தனகாஹாகும்புர மற்றும் மாதன்காஹாவத்த பாவுல ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. பீ. கே. கொஸ்த்தா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1983, மே 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 1656 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 (15 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : பள்ளிமுள்ள பன்சலைக்கான வீதி ; கிழக்கிற்கு : கூறப்பட்ட இல. 1656 எனும் வரைபடத்தின் லொட் 2 ; தெற்கிற்கு : கூறப்பட்ட இல. 1656 எனும் வரைபடத்தின் லொட் 1 மற்றும் ஓடை ; மற்றும் மேற்கிற்கு : கூறப்பட்ட இல. 1656 எனும் வரைபடத்தின் லொட் 1 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.3பே.) மற்றும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எப் 385/179 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-290/3

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. 0013 5001 7492-ஏ. டீ. என். டீ. கருணாநாயக்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.12.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.08.21 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.14 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினேழு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து அறுநூற் றிருபத்தைந்து ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 17,39,625.62) 2008, ஓகஸ்து 09 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பதினைந்து இலட்சத்து நாற்பத்தோராயிரத்து முந்நூற்றெழுபத்தாறு ரூபா அறுபத்தாறு சதம் (ரூ. 15,41,376.66) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010, யூலை 31 ஆந் திகதி மு. ப. 9.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு நிர்வாக மாவட்டத்தின், ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹேவாகம் கோரலேயின் பல்லேபத்துவின் ஹோமாகமையில் பிட்டிபனையில் அமைந்த "கொடஹேனவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். எம். எல். பிரேமச்சந்ர என்பவரால் (2001, செத்தெம்பர் 16 ஆந் திகதி நிலஅளவீடு செய்யப்பட்டு உப பிரிவாக்கப்பட்டது) தயாரிக்கப்பட்ட 2001, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 2260 எனும் வரைபடத்தில், காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4சி எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : இங்கமைந்த ஹை வீதி மற்றும் இங்கமைந்த லொட் 4பி ; கிழக்கிற்கு : இங்கமைந்த லொட் 4பி மற்றும் ஆரியசேன மற்றும் ஏனையோரினது காணி மற்றும் இங்கமைந்த லொட் 4டி ; தெற்கிற்கு : இங்கமைந்த லொட் 4டி ; மற்றும் மேற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எச். எம். எல். பிரேமசந்ர என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2259 எனும் வரைபடத்தில் லொட் 4ஏ மற்றும் ஹை வீதி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் பதின்மூன்று தசம் இரண்டு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 13.24பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள்,

*கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்தும் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் ஹோமாகமை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஜீ 1512/134 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7-290/4*

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

*(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

*கணக்கு இல. 0018 5000 3358-என். ஏ. கருணாசிரி*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2003.03.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2003.12.26 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2003.12.12 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதின்மூன்று இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து எழுநூற்றுப்பதினொரு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 13,91,711.71) 2002, ஒற்றோபர் 24 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை எட்டு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து நூற்றைம்பத்தைந்து ரூபா முப்பத்துநான்கு சதம் (ரூ. 8,82,155.34) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு தசம் ஐந்து வீதம் (18.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி மு. ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச சபை எல்லைகளுக்குள் சல்பிட்டி கோரளேயின் பல்லேபத்துவின் ஸ்வாரபொல கிராமத்தில் மொரட்டுவை வீதியினூடாக அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. ஜீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, மே 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 3538 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் பி2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட் பி1 ; கிழக்கிற்கு : 10 அடி அகல வீதி (இல. 3439 எனும் வரைபடத்தின் லொட் சி) ; தெற்கிற்கு : மொரட்டுவை வீதி ; மற்றும் மேற்கிற்கு : யூ. டீ. சமரசேன மற்றும் ஏனையோரின் காணி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.5பே.) கூறப்பட்ட இல. 3439 எனும் வரைபடத்திற்கு அமைவாக அங்கு அமைந்த சகல கட்டிடங்கள் அனைத்துமுடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. ஜீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, பெப்புருவரி 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 3538 எனும் வரைபடத்தின் லொட் சீ (10 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்), வழி மீதும் அதன் ஊடாக பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடன் கூடியது. மற்றும் கொழும்பு (தற்போது கல்கிஸ்ஸை) காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எம் 2153/219 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7-290/5*

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

*(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

*கணக்கு இல. 1017 5014 0328-ஏ. எஸ். ஹோப்ஸ் மற்றும் கே. என். ஹோப்ஸ்*

